பழநி மது பாரில் புகுந்து ரகளை

திண்டுக்கல் மாவட்ட பாஜ தலைவர் கைது

பழநி, ஜன. 6: பழநியில் தனியார் மது பாரில் கட்சியினருடன் புகுந்து ரகளையில் ஈடுபட்ட திண்டுக்கல் மாவட்ட பாஜ தலைவரை போலீசார் கைது செய்தனர்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி வன்கொடுமை கண்டித்து மதுரையில் பாஜ மகளிரணி சார்பில் கடந்த 3ம் தேதி பேரணி நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், அதில் கலந்துகொள்ள பழநியில் இருந்து புறப்பட்ட பாஜ மகளிரணியினரை போலீசார் கைது செய்து, தனியார் மண்டபத்தில் அடைத்தனர். அவர்களை திண்டுக்கல் மாவட்ட பாஜ தலைமையில் கனகராஜ் தலைமையில் அந்த கட்சியினர் சந்திக்க முயன்றனர். இதற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் போலீசார் - பாஜவினர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதையடுத்து கனகராஜ் தலைமையில் பாஜவினர் அருகே உள்ள தனியார் மதுபான பாருக்குள் புகுந்து, கோஷமிட்டனர். இதுகுறித்து தனியார் பார் நிர்வாகம் அளித்த புகாரின் பேரில், அத்துமீறி பாருக்குள் நுழைந்து மிரட்டல் விடுத்தது, கலவரம் உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் கனகராஜ் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்திருந்தனர். இந்நிலையில் பழநி - கொடைக்கானல் சாலையில், அய்யம்புள்ளி சோதனைச்சாவடி அருகே கனகராஜை போலீசார் நேற்று மாலை கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரித்து வருகின்றனர்.

டங்ஸ்டன் சுரங்க ஏலம் நிரந்தர ரத்து கோரி போராட்டம்

▶ மதுரை மாவட்டம், மேலூர் அருகே அரிட்டாபட்டி பகுதியில் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைக்க ஒன்றிய அரசு அனுமதி அளித்ததை கண்டித்தும், சுரங்க திட்டத்தை நிரந்தரமாகக் கைவிடக் கோரியும் தும்பைப்பட்டி ஊராட்சியில் நேற்று கடையடைப்பு போராட்டம் நடத்தியும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கண்களில் கருப்புத் துணியை கட்டியும் போராட்டம் நடத்தினர்.

சினிமா படப்பிடிப்பிற்கு வந்த

கங்கை அமரனுக்கு உடல்நலம் பாதிப்பு

■ மருத்துவமனையில் அனுமதி

சிவகங்கை, ஜன. 6: சிவகங்கை அருகே படப்பிடிப்பில் பங்கேற்க வந்த கங்கை அமரன் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மேல்சிகிச்சைக்காக மதுரைக்கு அழைத்து செல்லப்பட்டார். சிவகங்கை மற்றும் மானாமதுரை பகுதிகளை சுற்றி பிரபல சினிமா நிறுவனம் எடுத்து வரும் திரைப்படத்தில், இசையமைப்பாளர் கங்கை அமரன் நடித்து வருகிறார். அந்த திரைப்படத்தின் படப்பிடிப்பில் பங்கேற்க நேற்று மானாமதுரை வந்திருந்தார். அப்போது கங்கை அமரனுக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டதால், அவர் மானாமதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கிருந்து முதலுதவி சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர், பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

விழுப்புரம் மாநாட்டில் பங்கேற்க வந்த

வெங்கடேசன் எம்பிக்கு திடீர் உடல்நல குறைவு

முதல்வர் நலம் விசாரித்தார்

விழுப்புரம், ஜன. 6: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு விழுப்புரத்தில் கடந்த 3ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. மாநாட்டில் மதுரை வெங்கடேசன் எம்பியும் பங்கேற்றார். விழுப்புரம் நேருஜி வீதியில் உள்ள தனியார் மாலில் உள்ள ஓட்டலில் தங்கி இருந்த அவர் நேற்று காலை நடைபயிற்சி சென்றார். அப்போது திடீரென்று அவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது. உடனடியாக திருச்சி சாலையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு பல்வேறு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர்.

இதனிடையே முதல்வர் மு.க.ஸ்டாலின், மருத்துவ குழுவினரை தொடர்பு கொண்டு சிகிச்சை விவரம் குறித்து கேட்டறிந்தார். மேலும் வெங்கடேசன் எம்பியிடம் போனில் பேசி நலம் விசாரித்தார். அமைச்சர்கள் பொன்முடி, சி.வெ.கணேசன் உள்ளிட்டோர் மருத்துவமனைக்கு சென்று நலம் விசாரித்தனர். சிகிச்சைக்கு பின் அவர் பிற்பகலில் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்.

முதல்வருக்கு நன்றி: எம்பி சு.வெங்கடேசன் எக்ஸ் தளத்தில், "எனக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்ட செய்தியை அறிந்து அக்கறையுடன் அலைபேசி வாயிலாக நலம் விசாரித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் மூர்த்தி ஆகியோருக்கு நன்றி. நேரில் நலம் விசாரித்த அமைச்சர்கள் பொன்முடி, கணேசன், முன்னாள் எம்பி கவுதம சிகாமணி, எம்எல்ஏ அன்னியூர் சிவா, விழுப்புரம்கலெக்டர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

திமுகவுடன் எங்கள் பயணம் தொடரும்

மார்க்சிஸ்ட் புதிய செயலாளர் சண்முகம் பேட்டி

விழுப்புரம், ஜன. 6: விழுப்புரத்தில் நடந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநாட்டில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட மாநில செயலாளர் பெ.சண்முகம் பேட்டி: ஒன்றிய பாஜக அரசு மதவெறி மட்டுமல்ல, மாநில அரசுகளின் அதிகாரங்களைப் பறிப்பது, மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் பாரபட்சம் காட்டுவது, அரசியல்சாசனம் வழங்கியிருக்கிற அடிப்படை உரிமைகளுக்கு மாறாக நடந்துகொள்வது போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுகிறது. உழைக்கும் மக்களுக்கு எதிரான, பொருளாதார கொள்கைகளுக்கு எதிரான எங்கள் போராட்டத்தை தொடர்ந்து நாங்கள் மேற்கொள்வோம்.

தமிழகத்தில் மதவெறி சக்திகளை எதிர்ப்பதில் திமுகவுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து பயணிக்கும். அதே நேரத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு ஜனநாயக முறையில் எதிர்ப்புகளை தெரிவிப்போம்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மக்கள் நலன்சார்ந்த பிரச்னைகளில் சமரசமற்ற போராட்டங்களை நடத்துவதன் மூலமாகத்தான் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்ற கட்சியாக இருக்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

திருமணமான இரண்டே மாதத்தில் சோகம்

பைக் மீது அரசு பஸ் மோதி பெண் எஸ்ஐ, கணவர் பலி

சிதம்பரம், ஜன. 6: கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே அக்கரை ஜெயங்கொண்டபட்டினத்தை சேர்ந்தவர் அண்ணாதுரை. இவரது மகன் கலைவேந்தன்(36). இவர் பரங்கிப்பேட்டை அருகே தனியார் பவர் பிளாண்ட்டில் வேலை செய்து வந்தார். இவரது மனைவி இளவரசி(30). இவர் குமராட்சி காவல் நிலையத்தில் சப்-இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்தார்.

நேற்று மதியம் இருவரும் உறவினர் வீட்டு விசேஷத்திற்காக பைக்கில் சென்று கொண்டிருந்தனர். கலைவேந்தன் பைக்கை ஓட்டி சென்றார். சிதம்பரம் அடுத்த சித்தலபாடி அருகே சென்றபோது, எதிரே கொடியம்பாளையத்தில் இருந்து சிதம்பரம் நோக்கி வந்த அரசு பஸ் எதிர்பாராதவிதமாக பைக் மீது மோதியது. இதில் கணவன், மனைவி இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இவர்களுக்கு 2 மாதங்களுக்கு முன்புதான் திருமணம் நடந்தது குறிப்பிடத்தக்கது.

அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு

காளைகள், வீரர்களுக்கு ஆன்லைன் பதிவு இன்று துவக்கம்

மதுரை, ஜன. 6: தைப் பொங்கலை முன்னிட்டு, மதுரை மாவட்டத்தில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டிகள் வெகு சிறப்பானவை. இந்த ஆண்டு ஜன. 14ம் தேதி மதுரை அவனியாபுரத்திலும், 15ம் தேதி பாலமேட்டிலும், 16ம் தேதி அலங்காநல்லூரிலும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ளன. இதில் பங்கேற்க காளைகள் மற்றும் வீரர்கள் ஆன்லைன் வாயிலாக பதிவு செய்ய வேண்டும் என மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து மதுரை கலெக்டர் சங்கீதா கூறியிருப்பதாவது: அரசு பிறப்பித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி நடத்தப்படும் இந்த ஜல்லிக்கட்டில் கலந்து கொள்ளும் மாடுபிடி வீரர்கள் தங்கள் பெயர்களை madurai.nic.in என்ற இணைய தளம் மூலம் பதிவு செய்ய வேண்டும். காளைகளுக்கான பதிவுகளையும் இதே இணைய தளத்தில் மேற்கொள்ள வேண்டும்.

இந்த பதிவுகள் ஜன வரி 6 (இன்று) மாலை 5 மணிக்கு துவங்கி, ஜன வரி 7 (நாளை) மாலை 5 மணிக்கு நிறைவடையும். அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஆகிய இடங்களில், ஏதேனும் ஒரு கிராமத்தில் மட்டுமே ஜல்லிக்கட்டில் பங்கேற்க காளைகளுக்கு அனுமதியளிக்கப்படும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கருப்பு துப்பட்டா பறிமுதல் விவகாரம்

அதிகமான எச்சரிக்கையுடன் செயல்பட்டதால் நிகழ்ந்தது

பெருநகர காவல் துறை விளக்கம்

சென்னை, ஜன. 6: சென்னை பெருநகர காவல்துறை வெளியிட்ட அறிக்கை:

நேற்று (ஜன.5ம் தேதி) எழும்பூர் பகுதியில் நடைபெற்ற அரசு விழா நிகழ்வின் போது சென்னை பெருநகர காவல், பாதுகாப்பு சென்னை காவல் பிரிவினர் விழா நடக்கும் உள் அரங்கிற்குள், அனுமதிக்கப்பட்ட நபர்களை தணிக்கை செய்து அனுப்பும் போது. கருப்பு துப்பட்டா அணிந்து வந்தவரிடம். கருப்பு துப்பட்டாவை வாங்கி வைத்தனர்.

இந்நடவடிக்கை அங்கு பணியிலிருந்த காவல் ஆளிநர்கள் தேவைக்கு அதிகமான எச்சரிக்கையுடன் செயல்பட்டதால் நிகழ்ந்தது என தெரியவருகிறது.

இனி அவ்வாறு நிகழாவண்ணம் இருப்பதற்கு பாதுகாப்பு சென்னை காவல் பிரிவிற்கு தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) இன் கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை, 15 நாள் மின்-ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எப்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் கவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' மற்றும் 'எந்த உத்தரவாதமும் இல்லாத' அடிப்படையில் 23–01–2025 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 23–01–2025 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 22–01–2025 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப–கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	30.12.2024-ன்படி நிலுவைத்தொகை
1.	TCHHL040400010010727 3 & TCHIN040400010010869 7	திரு. கஜேந்திர கொல்லபள்ளி திருமதி. ரம்யா	ஒப்பந்த எண். TCHHL0404000100107273 இன்படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.34,24,097/– மற்றும் ஒப்பந்த எண். TCHIN0404000100108697 இன்படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.1,11,916/– மொத்தம் ரூ.35,36,013/–& 08.02.2024	பிளாட் எண்.11– ரூ.15,40,000/– மற்றும் பிளாட் எண்.12– ரூ.1,54,000/–	பிளாட் எண்.11– ரூ.1,54,000/– மற்றும் பிளாட் எண்.12– ரூ.15,40,000/–	கையக	ஒப்பந்த எண் TCHHL0404000100107273–ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.39,04,116 மற்றும் ஒப்பந்த எண் TCHIN0404000100108697–ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.1,46,021/– ஆக மொத்தம் ரூ.40,50,137/–

அசையா சொத்தின் விவரம்:காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது குன்றத்தூர் வட்டம், ஸ்ரீ பெரும்புதூர் வட்டம், வட்டம்பாக்கம் கிராமம், ச.எண்.93/33 மற்றும் ச.எண்.93/18, பட்டா எண்.1258 மற்றும் 1259 இன்படி புதிய சர்வே எண். 93/18A மற்றும் 93/33A இல் உள்ள ஓஎம்எஸ் கிரீன் சிட்டியில் 1590 ச.அடி பரப்பளவு உள்ள மனை எண்.11 மற்றும் 1590 ச.அடி பரப்பளவு உள்ள மனை எண்.12 ஆகிய இரண்டும் சேர்ந்து மொத்தம் 3180 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. எல்லைகள் மற்றும் அளவீடு: மனை எண்.11: வடக்கில்: 23 அடி சாலை – 53 அடி, தெற்கில்: மனை எண்.12 – 53 அடி, கிழக்கில்: மனை எண்.10 – 30 அடி, மேற்கில்: காலி நிலம் – 30 அடி, பரப்பளவு 1590 ச.அடி, எல்லைகள் மற்றும் அளவீடு : மனை எண்.12: வடக்கில்: மனை எண்.11 – 53 அடி, தெற்கில்: 23 அடி சாலை – 53 அடி, கிழக்கில்: மனை எண்.13 – 30 அடி, மேற்கில்: காலி நிலம் – 30 அடி, பரப்பளவு 1590 ச.அடி.செங்கல்பட்டு பதிவு மாவட்டம், சங்குவார்சத்திரம் துணை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள சொத்து.

2.	TCHHL040400010008428 1	திரு. C முகமது ஹனீப் திருமதி ரேஷ்மாஷாஹதியா C S	Rs. 2,25,96,684/- 09-11-2022	பிளாட் எண்.S1– ரூ.45,00,000/– மற்றும் பிளாட் எண்.S2–ய ரூ.35,00,000/– மற்றும் பிளாட் எண்.S3– ரூ.40,00,000/–	பிளாட் எண்.S1– ரூ.4,50,000/– மற்றும் பிளாட் எண்.S2– ரூ.3,50,000/– மற்றும் பிளாட் எண்.S3– ரூ.4,00,000/–	கையக	ரூ.29644036/– (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று ஆறு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து முப்பத்தாறு மட்டும்).

அசையாச் சொத்து விவரம்: அனைத்து துண்டு மற்றும் பகுதி அடங்கிய அட்டவணை–A சொத்து (சொத்தின் மொத்த அளவு) சென்னை மாநகராட்சி எல்லைக்குள், புலியூர் கிராமம், எழும்பூர் வட்டம், சென்னை மாவட்டத்தின், சர்வே எண்கள். 125/1 மற்றும் 125/4, டி.எஸ். எண். 6/6, பிளாக் எண். 10 இல் அடங்கிய, பழைய கதவு எண். 35/1, முந்தைய கதவு எண். 35/5 மற்றும் 35/5 தற்போது கதவு எண்கள். 101/1 மற்றும் 101/2, பாரி தெரு, புலியூர், ரூளைமேடு, சென்னை–600094 இல் 2395 சதுர அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதிகளும் உள்ள சொத்து. எல்லைகள்: வடக்கில்: பாரி தெரு, தெற்கில்: கால்வாய், கிழக்கில்: பழைய கதவு எண். 35, புதிய கதவு எண். 99, மேற்கில்: பழைய கதவு எண். 35/2, புதிய கதவு எண். 102. அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்–36 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்–35 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்–74 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்–66 அடி. மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கோடம்பாக்கம் சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.
அட்டவணை 'B' சொத்து: (சொத்து இதன்மூலம் உரிமை மாற்றப்பட்டது) ஃபிளாட் எண் S2 என்ற, இரண்டாம் தளத்தில் 558 சதுர அடி கீழ்ப்பரப்பின் பரப்பளவுடன் அட்டவணை 'A' இல் குறிப்பிடப்பட்ட சொத்தில் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாத பங்கு 248 சதுர அடி மற்றும் ஃபிளாட் எண்.S3 என்ற இரண்டாம் தளத்தில் 830 சதுர அடி கீழ்ப்பரப்பின் பரப்பளவுடன் அட்டவணை 'A' குறிப்பிட்ட சொத்தில் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாதப் பங்கு 370 சதுர அடி மேலும் ஃபிளாட் எண். S1 என்ற இரண்டாம் தளத்தில் 1019 கீழ்ப்பரப்பின் பரப்பளவுடன் அட்டவணை 'A' குறிப்பிட்ட சொத்தில் பாகம் பிரிக்கப்படாதப் பங்கு 454 சதுரடி. கட்டிட பரப்பளவு 558 சதுரடி பொதுப் பரப்புகள் உட்பட தூண் தளத்தில் ஒரு மேற்கூரையிட்ட கார் நிறுத்துமிடம் உட்பட, அடோன் ஆக பெயரிடப்பட்ட அபார்ட்மெண்ட் உள்ள சொத்து.

3.	TCHHL0490000100229679 & TCHHF0490000100229683 & TCHIN0490000100231306	திருமதி. வேளாங்கண்ணி கிளாடிஸ் பாபு ஜெஸ்லின்	TCHHL0490000100229679 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.6,52,601/– மற்றும் TCHHF0490000100229683 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.17,72,433/– மற்றும் TCHIN0490000100231306 என்ற ஒப்பந்த எண்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.1,44,964/–ஆக மொத்தம் நீங்கள் செலுத்த வேண்டியது ரூ.25,69,998/– & 09.05.2024	Rs. 20,00,000/- (ரூபாய் இருபது லட்சம் மட்டும்)	Rs. 2,00,000/- (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்)	கையக	ஒப்பந்த எண் TCHHL0490000100229679–ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.7,46,218 மற்றும் ஒப்பந்த எண் TCHIN0490000100231306–ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.1,66,827/– மற்றும் ஒப்பந்த எண் TCHHF0490000100229683–ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.19,50,619/– ஆக மொத்தம் ரூ.28,63,664/–

அசையாச் சொத்து விவரம்: செங்கல்பட்டு பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டம், சாலமங்கலம் கிராமம், குன்றத்தூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், சர்வே எண். 226/3, புதிய சர்வே எண்: 226/108, லேஅவுட் அனுமதி LLP/DTCP.875/1995 மற்றும் துணைப் பிரிவு அனுமதி எண்.03/2022–2023 இன்படி அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா நகர் மற்றும் ஸ்ரீ துர்கா சித்தர் நகரில் மனை எண்.13A&12A இல் உள்ள 1175 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பக்கம் அடங்கிய நிலம் மற்றும் கட்டிடம் உள்ள சொத்து. எல்லைகள்: வடக்கில்: மனை எண்.13B&12B, தெற்கில்: பூங்கா, மேற்கில்: மனை எண்.12 டி, கிழக்கில்: 30 அடி சாலை, அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 47 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 47 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்: 25 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம்: 25 அடி.

4.	TCHHL0404000100084357	திரு.தியாகராஜன் V, திருமதி.ருக்குமணி தேவி T	ரூ.34,24,539/– (முப்பத்து நான்கு லட்சத்து இருபத்து நான்காயிரத்து ஐநூற்று முப்பத்து ஒன்பது மட்டும்) & 27–04–2023	Rs. 26.21.000/- (ரூபாய் இருபத்தாறு லட்சத்து இருபத்து ஓராயிரம் மட்டும்)	Rs. 2,62,100/- (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்திரண்டாயிரத்து நூறு மட்டும்)	கையக	ரூ.4516393/– (ரூபாய் நாற்பத்தைந்து லட்சத்து பதினாறாயிரத்து முன்னூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்)

அசையாச் சொத்து விவரம்: A–அட்டவணை அனைத்து துண்டு மற்றும் பகுதியைக் கொண்ட காலி நிலம் கிழக்கு பகுதி பரப்பளவு ஏக்கர் 0.50 சென்ட்களில் ஏக்கர் 0.24 சென்ட், சர்வே எண்.183/1, பட்டா எண்.123, பட்டாவின்படி துணைப் பிரிவு சர்வே எண்.183/1A, எண்.28, பெருங்களத்தூர் கிராமம், தாம்பரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள்: வடக்கு: 20 அடி சாலை, தெற்கு: சர்வே எண்.183/4 கிழக்கு: சர்வே எண்.183/1B, மேற்கு: மனை எண்.A5. அளவீடு: வடக்கு பக்கம். 30 அடி, தெற்கு பக்கம். 30 அடி, கிழக்கு பக்கம். 49 அடி 3 அங்குலம், மேற்கு பக்கம். 48 அடி 10 ½ அங்குலம். மேற்குறிப்பிட்ட சொத்து பெருங்களத்தூர் டவுன் பஞ்சாயத்து எல்லை மற்றும் படப்பை சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது. C–அட்டவணை (சொத்து இங்கே அறிவிக்கப்படுகிறது) 416 ச.அடி (33.66 ச.மீட்டர்) பிரிக்கப்படாத பங்கு நிலம் B அட்டவணையில் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. D–அட்டவணை: மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை A பிளாட் பக்கம்க்கு மேலே குடியிருப்பு பிளாட் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. 416 ச.அடி பிரிக்கப்படாத பங்கு நிலம் B–அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டுமானப் பகுதி 828 ச.அடி (பொதுப்பக்கம் உட்பட) ஆர்.சி.சி.மாடி கட்டடம் 2ஆவது தளம், அத்துடன் கார் நிறுத்தும் வசதி, பிளாட் எண். S–1, C பிளாக், மனை எண்.,A–4 பெருங்களத்தூர், சென்னை–600063.

16	TCHHL0481000100250566 & TCHIN0481000100250893	திரு. சத்யகலா K திரு. கரும்பாசலம் J	ஒப்பந்த எண். TCHIN0481000100250893 கீழ் உள்ள நிலுவைத் தொகை ரூ.99,529/– மற்றும் ஒப்பந்த எண். TCHHL0481000100250566 கீழ் உள்ள நிலுவைத் தொகை ரூ.6,23,279/– ஆக மொத்தம் செலுத்த வேண்டியது ரூ.7,22,808/– (ரூபாய் ஏழு லட்சத்து இருபத்திரண்டாயிரத்து எண்ணூற்று எட்டு மட்டும்) & 10–07–2024	Rs. 26,90,000/- (ரூபாய் இருபத்தாறு லட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்)	Rs. 2,69,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்து ஒன்பதாயிரம் மட்டும்)	கையக	ஒப்பந்த எண் TCHHL0481000100250566–ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.7,06,550/– மற்றும் ஒப்பந்த எண் TCHIN0481000100250893–ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.1,11,460/– (ரூபாய் ஒரு லட்சத்து பதினோறாயிரத்து நானூற்று அறுபது மட்டும்) ஆக மொத்தம் ரூ.8,18,010/– (ரூபாய் எட்டு லட்சத்து பதினெட்டாயிரத்து பத்து மட்டும்)

அசையா சொத்தின் விவரங்கள்: அட்டவணை A: பழைய எண்.84, புதிய எண்.96, புதுச்சேரி கிராமம், ஸ்ரீ பெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சர்வே எண்.109/2 இல் உள்ள ஏக்கர் 0.64 சென்ட்கள் பரப்பளவு உள்ள நிலம் சர்வே எண்.109/3A1A இல் உள்ள ஏக்கர் 0.22 சென்ட்கள் பரப்பளவு உள்ள நிலம் சர்வே எண்.109/3A1B மற்றும் சர்வே எண்.109/3A2 இல் உள்ள ஏக்கர் 0.94 சென்ட்களில் ஏக்கர் 0.85 ¾ சென்ட்கள் பரப்பளவு உள்ள நிலம் சர்வே எண்.109/3B இல் உள்ள ஏக்கர் 0.28 சென்ட்கள் பரப்பளவு உள்ள நிலம் ஆகிய அனைத்தும் மொத்தம் ஏக் 1.99 ¾ சென்ட்கள் நிலம் உடைய அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் அடங்கிய சொத்து.
அட்டவணை B: (சொத்து இதன்மூலம் உரிமைமாற்றப்பட்டது) திருச்சி மாவட்டம், கரூர் பதிவு மாவட்டம், நாகவரம் சார்–பதிவு மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், பேட்டைவாய்த்தலை கிராமம், S.No.43/7, புதிய துணைப்பிரிவின் S.No.43/7A1 0.23.05 ஹெக்டேர் பரப்பளவு உள்ள சொத்து. எல்லைகள்: வடக்கில்: கரும்பாசலம் பஞ்சாயத்து நடைபாதை, தெற்கில்: பிச்சை, செந்தில், கோகிலா வகையறாவுக்குச் சொந்தமான நிலம், கிழக்கில்: பஞ்சாயத்து சாலை, மேற்கில்: நாகம்மாள் வகையறா நிலம், அளவீடு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம்: 47.6 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 47.6 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 25.5 அடி, வடக்கு தெற்